In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

S.C.No. 40/2008
Prosecution witness P.W.3
Name: Dr.Tamilarasan
Calling:
Father Name:
Religion:
Village:
Caste:
Taluk:
Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 17.03.2026.

**(A1 died. A4 absent, petition u/s 355 BNSS. filed and allowed and other accused present.)**

முதல் விசாரணை :-

நான் தற்சமயம் வத்தலக்குண்டு அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணியாற்றி பணி ஓய்வு பெற்று வத்தலக்குண்டில் வசித்து வருகிறேன். கடந்த 25.11.2001ம் தேதி இரவு 8.45 மணியளவில் தெய்வராஜ், தமிழ்நாடு அரசு போக்குவரத்துகழக ஓட்டுநர் காயம் இருப்பதாக சிகிச்சைக்காக என்னிடம் வந்தார். அவர் அரசு போக்குவரத்து கழக பேருந்தில் பயணித்துக் கொண்டிருந்தபோது தெரியாத ஒருநபரால் கல்லால் அன்றைய தினம் இரவு 8.30 மணிக்கு மரியாயபட்டி அருகில் வைத்து தாக்கப்பட்டதாக கூறினார். அவரை பரிசோதனை செய்ததில் மூக்கின் மேல் ஒரு சிதைந்த காயம் 1x1 செ.மீ. அளவில் இருந்தது. மூக்கில் இரத்தம் வழிந்துகொண்டிருந்தது. அவரை மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அங்கிருந்த கிடைக்கப்பெற்ற அறிக்கையின்படி அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று அளித்தேன். நான் வழங்கிய விபத்து பதிவேடு **அதசாஆ.3.** என்னை ஆய்வாளர் இந்த வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்தார்.

11ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை-

மேற்சொன்ன காயம் கீழே விழுவதால் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். அரசு போக்குவரத்து கழக பேருந்தில் அந்நபர் பயணம்

செய்துகொண்டிருந்ததாகத்தான் என்னிடம் சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

1 முதல் 10, 12 முதல் 13 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –9ம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மறு விசாரணை – இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.03.17 17:09:55 +0530

Principal District Judge,
Dindigul.